செ.வெ.எண் : 47 நாள்:17.10.2017

**பத்திரிக்கை செய்தி**

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிவுரைப்படி திருநெல்வேலி மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

1. திருநெல்வேலி சுகாதார மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் கீழ் **2000 களப்பணியாளர்கள்** பணிக்கப்பட்டு **"ஏடிஸ்"** கொசு கண்டறியப்பட்டு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
2. மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிவுரையின்படி ஒவ்வொரு வட்டார பகுதிகளிலும் **மாவட்ட வருவாய் அலுவலர், சேரன்மகாதேவி சார் ஆட்சியர்,வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் துணை ஆட்சியர்** ஆகியோர்களால் **"டெங்கு"** பணியினை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு **"டெங்கு நோய்"** தடுப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.
3. குடியிருப்பு பகுதியில் உள்ள **"டயர், சிரட்டை, ஆட்டுக்கல் மற்றும் உடைந்த பானை மற்றும் நீர் தேக்கமுள்ள பொருட்களை** அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
4. **"டெங்கு நோய்"** கண்டறியப்பட்ட இடங்களில் நடமாடும் மருத்துவமனை மூலம் சிறப்பு மருத்துவ முகாம்கள் நாள்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.
5. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் நவீன இயந்திரத்தின் மூலம் **"டெங்கு நோய்"** கண்டறியப்பட்டு போதுமான சிகிச்சை வழங்கப்பட்டு வருவதுடன் தேவை ஏற்பின் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிறப்பு சிகிச்சை தேவைப்படும் பட்சத்தில் வாகன வசதியும் செய்யப்பட்டு வருகிறது.
6. பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் வகையில் அந்தந்த பகுதிகளில் தேவையான சுகாதார கல்வி வழங்கப்பட்டு வருகிறது.
7. **அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் காய்ச்சல் நோய் சிகிச்சையின் பொருட்டு தேவையான மருந்து மாத்திரைகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.**
8. **"டெங்கு நோய்"** கண்ட பகுதிகளில் சுகாதாரப் பணியாளர்கள் மூலம் போர்க்கால அடிப்படையில் டெங்கு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
9. பொது சுகாதாரப் பணியாளர்கள் மூலம் **"டெங்கு நோய்"** கண்டறியப்பட்ட பகுதிகளில், **கொசு ஒழிப்பு புகை அடித்தல்** பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொது மக்கள் தங்கள் பகுதியில் கொசு ஒழிப்பு பணி மற்றும் டெங்கு நோய் தடுப்பு பணிக்காக வரும் பணியாளர்களுக்கு தகுந்த ஒத்துழைப்பு வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், குடியிருப்பு/கட்டிட வளாகங்களில் கொசுப்புழு கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது தமிழ்நாடு பொது சுகாதாரத்துறை சட்டத்தின் கீழ் 1939 மற்றும் இந்திய தண்டனை சட்டம் ஆகியவற்றின் கீழ் நீதிமன்ற நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

மேலும், பொதுமக்கள் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களுக்கு கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணிற்கு (24 மணி நேரமும்) தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**0462 - 2577788**
**24X7 HELP LINE**

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.